டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் வல்லர்ஸ்
agridoctor.in | 19.11.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 127 | Madurai | Online Edition

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் புலிகள் பாதுகாப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது

ஐநா பருவநிலை மாற்ற மாநாட்டில் மத்திய அமைச்சர் பேச்சு



புது தில்லி, நவ.18

துருக்கியின் அண்டாலியாவில் நடைபெறும் ஐநா பருவநிலை மாற்ற மாநாட்டின் (சிஓபி 31) அமைச்சர்கள் நிலையிலான நிகழ்ச்சியில் உரையாற்றிய மத்திய சுற்றுச்சூழல், பருவ-நிலை மாற்றம், வனத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும் புலிகள் பாதுகாப்பின் முக்கியப் பங்கை எடுத்துரைத்தார். மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகமும், சர்வதேச புலி இனங்கள் கூட்டமைப்பும் இணைந்து நடத்திய இந்நிகழ்வில் நேபாளம், வெனிசுலா, கம்போடியா, இலங்கை ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையில் உருவான சர்வதேச புலி இனங்கள் கூட்டமைப்பு, உலகின் 7 முக்கிய புலி இனங்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துகிறது என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியாவில் சுமார் 85,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள 58 புலிகள் காப்பகங்கள், கார்பன் சேமிப்பு, நீர் சுத்திகரிப்பு, மண் வளப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு உதவுவதுடன் 600-க்கும் மேற்பட்ட ஆறுகளின் நீராதாரமாகவும் திகழ்கின்றன. வலுவான சட்டங்கள், சமூகப் பங்களிப்பு காரணமாக இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை 2022-ம் ஆண்டில் 3,682 ஆக உயர்ந்துள்ளதுடன், இது காடுகளில் வாழும் உலகின் மொத்த புலிகளின் எண்ணிக்கையில் 70%-க்கும் அதிகமாகும். மேலும், புலிகள் பாதுகாப்புத் திட்டம் ஆண்டுக்கு சுமார் 60 லட்சம் மனித நாட்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வேலூர் விதைப்பரிசோதனை நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு



வேலூர், நவ.18

வேலூர் விதைப் பரிசோதனை நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் லீலா அலெக்ஸ் திடீர் ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின் போது விதைச்சான்று உதவி இயக்குநரிடமிருந்து வரப்பெற்ற சான்று விதை மாதிரிகள் 560 எண்கள், விதை ஆய் வாளர்களிடமிருந்து வரப்பெற்ற ஆய்வாளர் விதை மாதிரிகள் 789 எண்கள் மற்றும் விவசாயிகள் மற்றும் விதை விற்பனை யாளர்களிடமிருந்து வரப்பெற்ற பணி விதை மாதிரிகள் 669 எண்கள் ஆக மொத்தம் 2018 விதை மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட;டுள்ளது என்பது பற்றியும், நவம்பர் 26 முடிய விதை மாதிரிகள் இலக்கில் 84% விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப் பட்டுள்ளது என்பது பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

பின்பு வேலூர், விதைப்பரிசோதனை நிலையத்தின் மூத்த வேளாண்மை அலுவலரான க.லதா, விதைப்பரிசோதனை நிலைய செயல்பாடுகளான விதை மாதிரி பெறுதல், குறியீட்டு எண் வழங்குதல், புறத்தூய்மை கணக்கிடுதல், விதைப்பு செய்தல், முளைப்புத்திறன் கணக்கிடுதல், விதை மாதிரிகளின் பகுப்பாய்வு முடிவுகளை வெளியிடுதல் போன்றவை குறித்து மாவட்ட ஆட்சியர் விவரித்து கூறினார். மேலும் ஆய்வகத்தில் பயன்படுத்தப்படும் இயந்திரங்களான விதை தூய்மையின் தரத்தை கண்டறிய பயன் படுத்தப்படும் விதைதூய்மை பகுப்பாய்வு பலகை, விதைகளை பிரிக்க பயன்படுத்தப்படும் விதை பிரிப்பான், பிற இரக கலவன் களை கண்டறிய பயன்படுத்தப்படும் நெல் தோல் உரிக்கும் இயந்திரம், ஈரப்பதம் கண்டறிய பயன்படுத்தப்படும் தானிய ஈரப்பத மீட்டர் மற்றும் பிற இயந்திரங்கள் ஆகியவைகளின் செயல்விளக்கம் குறித்து செய்து காண்பிக்கப்பட்டது. முளைப்புத்திறன் பரிசோதனை

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

முறைகளான சுருள்தாள் முறை, மடிப்புத்தாள் முறை, தாள்களின் மேல் விதைப்பு முறை, மணல் மேல் விதைப்பு முறை பற்றி விவரமாக எடுத்துரைக்கப்பட்டது.

வேலூர், விதைப்பரிசோதனை நிலையத்தின் வேளாண்மை அலுவலரான மு.சண்முகப்பிரியா, முளைப்புதிறன் அறையில் விதைகளின் முளைப்புதிறனை சரியாக கண்டறிய எவ்வளவு வெப்பநிலை, ஒளி இருக்க வேண்டும் என்பது பற்றியும், அதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர பயன்படுத்தப்படும் கருவிகள் பற்றியும் விளக்கமாக கூறப்பட்டது. ஆய்வகத்தில் விதை மாதிரிகள் எவ்வாறு பாதுகாத்து வைக்கப்படுகிறது என்பதையும், அவ்வாறு பாதுகாக்கப்பட்ட விதை மாதிரிகள் எந்த காலகட்டத்தில் அழிக்கப்பட வேண்டும் என்பதை பற்றியும் விளக்கி கூறப்பட்டது. மேலும் விதை பரிசோதனை நிலையத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் ஸ்பெக்ஸ் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது பற்றியும் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

விதை பரிசோதனை நிலையத்தில் விதையின் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன், பிற இரக கலவன் போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விதைப்பரிசோதனை முடிவுகளை தெரிந்து தரமான விதைகளை விவசாயிகளுக்கு வழங்கவும், அதன் மூலம் அதிக மகசூல் பெற்று நல்ல வருவாய் பெறவும் விதைப் பரிசோதனை நிலையத்தை பயன்படுத்தி கொள்ள விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள் முன்வரவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வின் போது ப நீ வித்யா, வேளாண்மை இணை இயக்குநர், வேலூர், கலைசெல்வி, துணை இயக்குநர், வேளாண் விற்பனை மற்றும் வணிகம், வேலூர், அ.இளையராஜா, விதைப் பரிசோதனை அலுவலர், காஞ்சிபுரம், வினித் மேக்லின், விதைச் சான்று மற்றும் உயிர்மச்சான்று உதவி இயக்குநர், வேலூர் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.



அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

மாவட்ட ஆட்சியருடன் கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவர்கள்

சேலம், நவ.18

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வேளாண் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் கா.இளம்பகவத் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.



அப்போது, பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியின் நான்காம் ஆண்டு மாணவர்களான லோகேஷ், மணிவாசகர், மதன், மதன்ராஜ், முகேஷ் குமார், முகில் தர்சன், முத்து சீனிச்சிதம்பரம், நந்தகுமரன் மற்றும் நட்ராஜ் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின்போது, மாணவர்கள் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் (RAWE) கீழ் பனமரத்துப்பட்டி வட்டார கிராமங்களில் விவசாயிகளுக்கு மேற்கொண்டு வரும் பல்வேறு வேளாண் சார்ந்த செயல்பாடுகள், செயல்விளக்கப் பயிற்சிகள் குறித்த பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டறிந் தார். மேலும், மாணவர்கள் தங்களது பயிற்சியின் போது பெற்ற அனுபவங்கள் மற்றும் விவசாயிகளுடன் இணைந்து மேற்கொண்ட பணிகள் குறித்தும் எடுத்துரைத்தனர்.

மாணவர்களின் செயல்பாடுகளைக் கேட்டறிந்த மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களது வேளாண் களப்பயிற்சிப் பணிகளைப் பாராட்டி, அறிவுரை வழங்கி ஊக்கப்படுத்தினார்.

தென்னையில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த விழிப்புணர்வு

மதுரை, நவ.18

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத் தைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள், தங்களது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டாரத்திற்கு உட்பட்ட சித்தரேவு பகுதியில் தென்னையில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மற்றும்



ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் வேளாண் மாணவர்களான பார்திபன்.ந, பிரசன்னா.தின, ரமேஷ்.த, ரித்திக் ஹரிஷ்.ம, சதீஸ்.த, சீனிவாசன்.வெ, செல்வ கணேஷ்.வே, சோலைமுத்து.மு மற்றும் கருணதயாளன்.மோ பங்கேற்று விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கினர்.

மாணவர் சோலைமுத்து.மு, காண்டாமிருக வண்டு தாக்குதலின் அறிகுறிகள் குறித்தும், அதைக் கட்டுப்படுத்த 'மெட்டாரைசியம் அனிசோப்ளியே' பூஞ்சை மற்றும் பக்கெட் பொறி ஆகியவற்றின் பயன்பாடு குறித்தும் விளக்கினார். மாணவர் பிரசன்னா.தின, சிவப்பு கூண் வண்டின் தாக்குதல் அறிகுறிகளையும், இனக்கவர்ச்சிப் பொறிகளின் முக்கியத்துவத்தையும் விவரித்தார். மாணவர் ரித்திக் ஹரிஷ்.ம, சுருள் வெள்ளை ஈ தாக்குதலின் அறிகுறிகள் குறித்து விளக்கினார். மாணவர் செல்வகணேஷ்.வே, 'கிரைசோபெர்லா' என்ற நன்மை செய்யும் உண்ணிப் பூச்சியின் முக்கியத்துவம் மற்றும் மைதா கரைசல் பற்றி எடுத்துரைத்தார்.

மாணவர் சதீஸ்குமார்.த, எருக்கு இலை கரைசல் தயாரிக்கும் முறையையும், அதனால் தென்னை மரத்திற்கு கிடைக்கும் நன்மைகளையும் செய்து காட்டினார். மாணவர் பார்திபன், தென்னை டானிக் கொண்டு வேர் ஊட்டம் அளிப்பதன் அவசியத்தை விளக்கினார்.

மேலும், நிகழ்ச்சியில் மாணவர்களால் தென்னையில் வேர் ஊட்டம் அளித்தல், மஞ்சள் ஒட்டுப் பொறி அமைத்தல் மற்றும் எருக்கு இலை கரைசல் தயாரித்தல் ஆகியவை விவசாயிகளுக்கு நேரடியாக செய்து காட்டப்பட்டன. இந்நிகழ்ச்சியின் மூலம் தென்னையில் ஏற்படும் முக்கிய பூச்சிகளைக் கட்டுப்படுத்துவது குறித்தும், சாகுபடிச் செலவைக் குறைத்து, சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, நிலையான முறையில் அதிக மகசூல் பெறுவதற்கான தொழில்நுட்ப அறிவு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

குன்றாண்டார்கோவில் வட்டாரத்தில் நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு தாக்குதல்

வேளாண்மை உதவி இயக்குநர் அறிவுரை!

புதுக்கோட்டை, நவ.18

புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் வட்டாரத்தில் நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு தாக்குதல் காணப்படுவதால், விவசாயிகள் தங்களது வயல்களைத் தொடர்ந்து கண்காணித்து உரிய மேலாண்மை முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குநர் அறிவுறுத்துகிறார்.



இப்புழுக்கள் நெற்பயிரின் இலைகளை நீளவாக்கில் சுருட்டி, அதன் உட்பகுதியில் இருந்து கொண்டு பச்சையத்தைச் சுரண்டி உண்கின்றன. இதனால் இலைகளில் வெள்ளை நிறக் கோடுகள் தோன்றி, பயிரின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

மேலாண்மை முறைகள்

தேவைக்கு அதிகமாக தழைச்சத்து உரமிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

வயல் வரப்புகளைச் சுத்தமாகப் பராமரித்து, களைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

தாக்குதலுக்கு உள்ளான இலைகளைச் சேகரித்து அழிக்க வேண்டும்.

சிலந்திகள் மற்றும் பொறிவண்டுகள் போன்ற நன்மை செய்யும் பூச்சிகளைப் பாதுகாக்க வேண்டும்.

டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் ஒட்டுண்ணி அட்டைகளை ஏக்கருக்கு 40,000 என்ற அளவில் வார இடைவெளியில் மூன்று முறை வெளியிடலாம்.

குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5% SC ஏக்கருக்கு 60 மி.லி.
ஃப்ளூபெண்டியமைடு 20% WG ஏக்கருக்கு 50 கிராம்.

கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 50% SP ஏக்கருக்கு 400 கிராம்.

எனவே, விவசாயிகள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை முறைகளைக் கடைப்பிடித்து, இலைச்சுருட்டுப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்தி நெற்பயிரின் வளர்ச்சி மற்றும் மகசூலைப் பாதுகாக்குமாறு வேளாண்மை உதவி இயக்குநர் கேட்டுக் கொள்கிறார்.



வேளாண் பேராசிரியர்களுக்கு தலைமைத்துவம் மற்றும் மேலாண்மை குறித்த பயிற்சி



கோயம்புத்தூர், நவ.18 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் சார்பில், வேளாண் பேராசிரியர்களின் அறிவு, திறன் மற்றும் கற்பித்தல் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கில், 'கற்று செயலாற்று' என்ற தலைப்பிலான மூன்று நாள் பயிற்சியின் தொடக்க விழா நேற்று பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றிய பயிர் மேலாண்மை இயக்குநர் முனைவர் எஸ்.பழனிவேலன், சிறந்த தலைமைத்துவம் என்பது ஒரு தெளிவான நோக்கத்தை வரையறுத்து, அதனை அடைவதற்கான இலக்கை நோக்கி அனைவரையும் ஒருங்கிணைத்துச் செயல்படுவதாகும் என்று குறிப்பிட்டார். மேலும், ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியில் தான் அங்கு பணியாற்றும் ஒவ்வொரு தனிநபரின் அடையாளமும் வளர்ச்சியும் அடங்கியுள்ளன என்பதை எடுத்துரைத்தார். ஒவ்வொருவரும் அறிவியல் சார்ந்த அறிவையும் திறன்களையும் தொடர்ந்து வளர்த்துக் கொள்ளும் போது, அவர்களின் தனித்துவமும், தலைமைப் பண்புகளும் இயல்பாகவே மேம்படும் என்றார்.

தொடர்ந்து, சிறந்த தலைமைத்துவமே தரமான ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான வலுவான கட்டமைப்பை உருவாக்குவதற்கு அடித்தளமாக அமைகிறது என்றும், இத்தகைய சூழல் உருவாக்கப்படும் போது தனிநபர்களின் திறன் மற்றும் வளர்ச்சி மட்டுமின்றி, ஒட்டு மொத்த நிறுவனத்தின் செயல்திறனும், நிர்வாக வளர்ச்சியும் உயர்வடையும் என்றும் வலியுறுத்தினார்.

வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மையர் முனைவர் அ.பாலசுப்பிரமணியன் சிறப்புரையாற்றும் போது, ஒரு தனிநபரின் திறன், ஆளுமை மற்றும் தலைமைத்துவப் பண்புகளை மேம்படுத்துவதில் பயிற்சி முக்கியப் பங்கு வகிக்கிறது என்று குறிப்பிட்டார்.

சிறந்த தலைமைத்துவத்தின் வழிகாட்டுதலுடன் நூற்றாண்டு காலப் பெருமையுடன் செயல்பட்டு வரும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பங்கள் இன்று உலகளவில் அங்கீகாரம் பெற்று வருகின்றன என்றார்.

மேலும், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் வேளாண் தொழில் துறையின் முன்னேற்றத்திற்கு இப்பல்கலைக்கழகம் ஆற்றி வரும் பங்களிப்பில் விஞ்ஞானிகளின் அர்ப்பணிப்பும், கடின உழைப்பும் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டினார். தொடர்ந்து, காலநிலை மாற்றம் மற்றும் எல் நினோ போன்ற இயற்கைச் சவால்கள் வேளாண்மையில் ஏற்படுத்தும் தாக்கங் களை எதிர்கொள்ள, விஞ்ஞானிகள் அண்மைக்கால அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களைத் தொடர்ந்து அறிந்து கொள்வது அவசியம் என்றார். இதுபோன்ற பயிற்சிகளின் மூலம் பெறப்படும் புதிய அறிவையும், தொழில்நுட்பத் திறன்களையும் வேளாண் ஆராய்ச்சிகளில் பயன்படுத்தி, காலத்தின் தேவைக்கேற்ற புதிய தொழில்நுட்பங்களைக் கண்டறிய வேண்டும் என்றும் வலியுறுத்தினார். அவ்வாறு உருவாக்கப்படும் தொழில்நுட்பங்கள் விவசாயப் பெருமக்களைச் சென்றடைந்து, அவர்களின் வாழ்வா தாரத்தை மேம்படுத்துவதோடு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் துணைபுரிய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

வாழ்த்துரை வழங்கிய திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குநர் முனைவர் பி.ஜெயகுமார் பேசுகையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வரும் நிறுவனத் தர உறுதிப்பாட்டு மையத்தின் (IQAC) மூலம் வேளாண் பேராசிரியர்களுக்குத் தொடர்ந்து சமகால அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற் றங்கள் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார். இத்தகைய பயிற்சிகள் பேராசிரியர்களின் அறிவையும், கற்பித்தல் திறனையும் மேம்படுத்துவதோடு, கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கம் மற்றும் வேளாண் வணிகம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் தரத்தை உயர்த்த உதவுகின்றன என்றார். இதன் மூலம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சித் தரம் உலகளவில் மேலும் அங்கீகாரம் பெறுவதுடன், அதன் சிறப் பான அடையாளமும், நிலைத்தன்மையும் தொடர்ந்து உறுதிப் படுத்தப்படுகின்றன என்று தெரிவித்தார்.

இப்பயிற்சியில் கல்விச் சிறப்பிற்கான தர உத்தரவாதம், ஆராய்ச்சி மேலாண்மை மற்றும் புத்தாக்கத்தில் உருவாகி வரும் புதிய அணுகு முறைகள், குழுப்பணி திட்டமிடும் திறன்கள் மற்றும் குழு உறுப்பினர் களின் வளர்ச்சிக்கு ஆதரவளித்தல், அலுவலக நிர்வாகத்தில் டிஜிட்டல் கருவிகளின் பயன்பாடு, பணிச்சூழலில் உணர்வுசார்

நுண்ணறிவு மற்றும் பணி வாழ்க்கை சமநிலையைப் பேணுதல், அலுவலக நிர்வாகத்தில் இணையப் பாதுகாப்பு ஆகிய தலைப்பு களில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. பல்கலைக்கழகம் மற்றும் பிற கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த துறைசார் வல்லுநர்கள் இப்பயிற்சி நிகழ்ச்சியில் பங்கேற்று தங்களது அனுபவங்களையும் அறிவுரைகளையும் பகிர்ந்து கொள்ள உள்ளனர்.

மேலும், இன்றைய மற்றும் நாளைய கல்வி முறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (TNAU) சட்டங்கள், விதிமுறைகள், ஒழுங்குமுறைகள், சட்டம் சார்ந்த சிக்கல்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகள் குறித்த மேலோட்டமான விளக்கங்கள், கணக்கியல் மற்றும் தணிக்கை நடைமுறைகள், தகவல் பாதுகாப்பைப் பேணுவதற்கான சிறந்த நடைமுறைகள் ஆகிய தலைப்புகளில் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

தோட்டக்கலை இணைப்பேராசிரியர் முனைவர் பெ.சா.கவிதா, வரவேற்புரையும், முனைவர் சு.உமேஷ் கன்னா, பேராசிரியர் (வனவியல்), நன்றியுரையும் வழங்கினர்.

இயற்கை திர இடுபொருட்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



ஈரோடு, நவ.18

ஈரோடு மாவட்டம், செல்லி பாளையம் கிராமத்தில் ஜே.கே.கே. முனிராஜா வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள் சார்பில் விவசாயிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது. இ ந் நி க ழ் ச் சி யி ல் வேளாண்மையில் பாரம்பரிய அறிவு நுட்பங்களின் (ITK – Indige-nous Technical Knowledge) அடிப்படையில் தயாரிக்கப்படும் இயற்கை திரவ இடுபொருட்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்க மளிக்கப்பட்டது. மேலும், ஒவ்வொரு இயற்கை திரவ இடுபொருளையும் தயாரிக்கும் முறை, அதற்குத் தேவையான மூலப்பொருட்கள், பயன்படுத்தும் விதம் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் குறித்து செயல்விளக்கத்துடன் பயிற்சி அளிக்கப் பட்டது. ரசாயன இடுபொருட்களின் பயன்பாட்டைக் குறைத்து, குறைந்த செலவில் கிடைக்கும் இயற்கை மூலப்பொருட்களைப் பயன்படுத்தி மண் வளத்தையும் பயிர்களின் ஆரோக்கியத்தையும் மேம்படுத்துவதன் அவசியம் எடுத்துரைக்கப்பட்டது. இப்பயிற்சியில் விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

உரப் பயன்பாட்டை அதிகரிக்கும் உத்திகள்



தற்போது உர விலை அதிகரித்து உள்ள சூழ்நிலையில் பயிர்களுக்கு இடப்படும் உரங்களின் இழுப்பைக் குறைத்து, அவற்றின் முழுப்பயனையும் தாவரங்கள் எடுத்துக் கொள்ள உதவும் முக்கிய உத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

FERTILIZERS USE EFFICIENCY அதிகரிக்க 4 R கொள்கை முறை பின்பற்ற வேண்டும். சரியான அளவு, சரியான உரம் தேர்வு, சரியான நேரம், சரியான முறையில் உரங்களை பயன் படுத்துவதால் சாகுபடிக்கான செலவு கணிசமாக குறைவதுடன் மண்வளமும் பாதுகாக்க முடியும்.

1) மண் பரிசோதனை மற்றும் சரியான அளவு (SOIL TESTING RIGHT RATE)

பயிர் சாகுபடிக்கு முன்னதாக மண்ணை எடுத்து பரிசோதனை செய்ய வேண்டும். மண்வளத்தை அறிந்து கொண்டு அதற்கேற்ப உரத்தினை தேர்வு செய்து இடுவதால் உர விரயத்தையும், கார மண்ணுக்கு அமில உரத்தையும், அமில மண்ணுக்கு கார உரத்தையும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அமில மண்ணிற்கு சுண்ணாம்பு பொருட்களை சேர்க்க வேண்டும்.

2) சமச்சீரான உரமிடுதல்

தழை (N) மணி (P) சாம்பல் (K) உரங்களை பயன்படுத்திட வேண்டும். அடியுரமாக மணி, சாம்பல் சத்துகளை இடவேண்டும். இவற்றின் கரை திறன் குறைவாக இருப்பதால் அடியுரமாக பரிந்துரைக்கபடுகிறது.

3) உரமிடும் நேரத்தை திட்டமிடல் (RIGHT TIME)

1) பிரித்து இடுதல் (SPLIT APPLICATION)

தழைசத்து யூரியா முழுமையாக இடுவதால் நீரில் கரைந்து வீணாகி விடும். எனவே அவற்றை 3-4 முறை பிரித்து இடுதல் வேண்டும்.

2) தழைசத்து அட்டவணை (LCC)

நெல்பயிரில் LEAF COLURING CHART பயன்படுத்தி, இலையின் பச்சை நிறத்திற்கேற்ப தழைசத்து இடுவதால் யூரியா பயன்பாட்டை 15-20% வரை குறைக்கலாம்.

3) உரமிடும் முறைகள் (RIGHT PLACE & METHODS)

1) வேர்மண்டலத்தில் இடுதல்

உரங்களை நிலம் முழுவதுமாக தூவி விடமால் பயிரின் வேர் பகுதியில் இடுதல் (PLACE MENT) பார்சால், குழி எடுத்து இட்டு மண்ணால் மூட வேண்டும்.

2) நீர்வழி உரமிடல் (FERTIGATION)

சொட்டுநீர் பாசனத்தின் மூலமாக நீரில் கரையும் உரங்களை கொடுப்பதால் உரங்கள் நேரடியாக பயிரின் வேர்பகுதி செல்லு வதால் 80-90% உரம் பயிருக்கு கிடைக்கும்.

4) இலைவழி தெளிப்பு (FOLIAR SPRAY)

நீரில் கரையக்கூடிய உரங்களை இலைகள் மீது தெளிப்பதால் பயிர்கள் எளிதாக உறிஞ்சிட முடியும். நிலத்தில் இடுவதைவிட உர அளவும் பாதியாக குறையும்.

5) வேம்பு பூசப்பட்ட யூரியா (NEEM COATED UREA)

சாதாரண யூரியாவை விட வேம்பு பூசப்பட்ட யூரியாவை பயன் படுத்தினால் தழைசத்து வீணாகாமல் மெதுவாக (SLOW RE-LEASE) பயிருக்கு கிடைக்கும்.

6) நானோ உரங்கள் (NANO FERTILIZERS)

நானோ டிஏபி, நானோ யூரியா போன்ற உரங்களை இலை வழியாக தெளிப்பதால் சுற்றுப்புற சூழல் பாதிக்காது. உரப் பயன் படும் குறையும்.

7) நீர் மற்றும் களை மேலாண்மை

சரியான நீர்ப்பாசன முறைகளை கையாள வேண்டும். உரம் போட்ட பின் நிலத்தில் அதிகமாக நீர்கட்ட கூடாது. அதிகப்படியான நீர் இருந்தால் உரங்கள் LEACHING வீணாகி விடும். காய்ச்சியலு மாக பாய்ச்சாலுமாக நீர்ப்பாசனத்தை கடைபிடிக்க வேண்டும்.

களை மேலாண்மை : உரமிடுவதற்கு முன் பயிரில் உள்ள களைகளை கட்டுப்படுத்த வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

தென்னை காண்டாமிருக வண்டைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை விழிப்புணர்வு நிகழ்ச்சி!



திண்டுக்கல், நவ.18

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரத்திற்கு உட்பட்ட மாங்கரை கிராமத்தில் 18.11.26 அன்று தென்னையைத் தாக்கும் காண்டாமிருக வண்டைக் கட்டுப்படுத்தும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) குறித்த செயல் விளக்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் இந்நிகழ்ச்சியை நடத்தினர். இதில் 52 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

நிகழ்ச்சியில் காண்டாமிருக வண்டின் தாக்குதல் அறிகுறிகள், வாழ்க்கைச் சுழற்சி மற்றும் தென்னை மரங்களில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விளக்கப்பட்டது. மேலும், வண்டுகளைக் கவர்ந்து பிடிக்க திரள் இனக்கவர்ச்சிப் பொறி (Aggregation Phero mone Trap) அமைக்கும் முறை, தென்னந்தோப்புகளில் குவிந்து உள்ள மட்கிய தென்னை மட்டைகள் மற்றும் கரிமக் கழிவுகளை அகற்றி இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் உழவியல் முறைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், வேப்ப எண்ணெய் மற்றும் வேப்பம் புண்ணாக்கைப் பயன்படுத்தும் முறைகள், ஆமணக்குப் புண்ணாக்கைப் பயன் படுத்தி வண்டுகளைக் கவர்ந்து அழிக்கும் உணவு ஈர்ப்புப் பொறி தயாரிப்பு முறை ஆகியவை விளக்கப்பட்டன. உயிரியல் கட்டுப்பாட்டு முறையாக Metarhizium anisopliae என்ற பூஞ்சாணத்தைப் பயன் படுத்தி புழுக்களைக் கட்டுப்படுத்தும் முறையும் எடுத்துரைக்கப் பட்டது. தென்னையின் குருத்துப் பகுதியில் மறைந்திருக்கும் காண்டாமிருக வண்டுகளை இரும்புக் கொக்கி (Iron Hook) மூலம் வெளியே எடுத்து அழிக்கும் செயல்விளக்கமும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாணவர்கள் விஷ்ணு ம, வினோத் குமார் சு, விக்னேஸ்வரன் இரா.ஜெ, தீபக்முருகன் வே, அரவிந்த், ராகுல் அ, லிங்கேஷ்வரன் ச, மோதிலால் வெ. மற்றும் பார்த்திபன் கிருஷ்ணா சி. ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு தொழில்நுட்ப விளக்கங்களை வழங்கினர். விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்று சந்தேகங்களைக் கேட்டறிந்தனர்.

கார்த்திகைபட்ட நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூலை பெற தரமான விதை அவசியம்!

கார்த்திகைபட்ட நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூலை பெற, அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ற குறைந்த வயதுடைய தரமான உயர் விளைச்சல் இரகங்களை தேர்வு செய்து பயன்படுத்த வேண்டும் என்று மூத்த வேளாண்மை அலுவலர் ஜெ.சோபனா தெரிவித்து உள்ளார்.



கார்த்திகை மாதத்திற்குள் நிலக்கடலையை விதைப்பு செய்வது அதிக மகசூலுக்கு வாய்ப்பை அளிக்கிறது. இந்த பட்டத்தில் சாகுபடி செய்யும் போது, போதிய மழை, சரியான தட்பவெப்ப நிலை சாதக மாக இருப்பதால் அதிக மகசூல் பெறப்படுகிறது. நல்ல தரமான விதைகளை தேர்வு செய்து விதைப்புக்கு பயன்படுத்த வேண்டும். பயிரிடும் விதை தரமானதாக இருப்பது அவசியம் என்பதால் விதையின் தரத்தை பரிசோதிக்க விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அரசு விதை பரிசோதனை நிலையத்தில் விதைகளை கொடுத்து அதன் தரத்தைஅறிந்து கொள்ளலாம். விதையின் தர நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் ஈரப்பதம் போன்றவை பரிசோதனை செய்யப்படுகின்றன.

தரமான நிலக்கடலை விதை என்பது குறைந்தபட்சம் 70 சதவீதம் முளைப்புத்திறனும், அதிகபட்சமாக 9 சதவீதம் ஈரப்பதமும் குறைந்த பட்சமாக 96 சதவீதம் புறத்தூய்மையும் இருத்தல் அவசியம். நிலக் கடலை விதைப் பரிசோதனை செய்ய 500 கிராம் அளவிற்கு நிலக் கடலை விதை மாதிரி எடுத்து பயிர், ரகம், நிலை மற்றும் குவியல் எண் ஆகியவை குறித்த விவரத்துடன் கொடுத்து விதையின் தரத்தை அறிந்து கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு மூத்த வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக முதல் தளம், விழுப்புரம் என்ற முகவரியை அணுகலாம். ஒரு மாதிரி பகுப்பாய்வுப் பரிசோதனைக் கட்டணமாக ரூ.80/- செலுத்த வேண்டும். இவ்வாறு செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெண்ணந்தூர் வட்டாரத்தில் கிராமத் தங்கல் திட்டம் தொடக்கம்!

நாமக்கல், நவ.18

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் வட்டாரத்தில் பி.ஜி.பி. வேளாண்மைக் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் மின்னக்கல் மற்றும் நாச்சிப்பட்டி கிராமங்களில் கிராமத் தங்கல் திட்டத்தைத் தொடங்கினர். இதன் ஒரு பகுதியாக விவசாயிகளுக்குப் பல்வேறு வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் நவீன சாகுபடி முறைகள் குறித்து பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வழங்கினர்.



இயற்கை வேளாண்மை மற்றும் இயற்கை வழி வேளாண்மை என்ற தலைப்பில் மாவட்ட அளவிலான பயிற்சி



கிருஷ்ணகிரி, நவ.18 கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டாரம் சிகரலப்பள்ளி கிராமத்தில் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை மற்றும் இயற்கை வழி வேளாண்மை என்ற தலைப்பில் அட்மா திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான பயிற்சி வேளாண்மை உதவி இயக்குனர் செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. உதவி இயக்குனர் பேசுகையில், பயிற்சியில் கலந்து கொண்டு இரசாயன உரங்களை குறைத்து உயிர் உரங்கள் மற்றும் பசுந்தாள் உரங்களைப் பயன்படுத்தி மண்வளத்தைப் பாதுகாக்கும் முறைகளை எடுத்துக் கூறினார். வேளாண்மை அலுவலர் பவித்ரா இரசாயன உரங்கள் மற்றும் செயற்கை பூச்சிக்கொல்லிகளைத் தவிர்த்து இயற்கை உரங்கள் பயன்படுத்திப் பயிர் சாகுபடி செய்தல், தொழு உரம், மண்புழு உரம், பசுந்தாள் உரப் பயிர்கள், உயிர் உரங்கள், இயற்கை வழி வேளாண்மை வெளிப்புற இடுபொருட்களைச் சார்ந்திருப்பதைக் குறைத்து, பண்ணையில் கிடைக்கும் இயற்கை வளங்கள் மற்றும் நுண்ணுயிர்களின் செயல்பாட்டைப் பயன்படுத்திப் பயிர் சாகுபடி செய்வதாகும். முக்கிய தொழில்நுட்பங்கள், பஞ்சகாவியா, ஜீவாமிர்தம், பீஜாமிர்தம், மூடாக்கு, இயற்கை பூச்சி விரட்டி தயாரித்தல் மற்றும் பண்ணை சார்ந்த இடுபொருள் தயாரித்தல் பற்றி கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் ராஜ்குமார், வேளாண்மை துறையில் உள்ள திட்டங்கள் மற்றும் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டிரியா, அசோட்டோபாக்டர் போன்றவற்றை முக்கியத்துவம் பற்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் அன்பரசு, உதவி தொழில்நுட்ப மேலாளர் சண்முகம், கிரிஜா ஆகியோர் செய்திருந்தனர்.

நெல் விதைக்கும் கருவி மற்றும் ட்ரோன் மூலம் மருந்து தெளிப்பு செயல்விளக்கம்

சிவகங்கை, நவ.18

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில், வேளாண்மைத்துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் ஏனாதி கிராமத்தில் படித்துரை, த.பெ.பெரியசாமி, விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் (அட்மா) நெல் விதைக்கும் கருவி செயல்விளக்கம் 100 சதவீதம் மானியத்தில் வழங்கப்பட்டது. வேளாண்மை துணை இயக்குநர் செல்வம் செயல்விளக்கம் அமைத்த வயலை ஆய்வு செய்து விவசாயி படித்துரையிடம் தொழில்நுட்பங்கள் வழங்கி நெல் விதைக்கும் கருவி மூலம் விவசாயி பயனடைந்த விபரத்தை கேட்டறிந்தார்.

ட்ரோன் மூலம் மருந்து தெளிப்பு செயல்விளக்கம்



மேலும், கொந்தகை மற்றும் எஸ்.வாகைக்குளம் கிராமத்தில் செல்லமணி, த.பெ. அடைக்கன் மற்றும் ஆறுமுகம், த.பெ. போஸ் ஆகியோருக்கு விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் (அட்மா) ட்ரோன் மூலம் மருந்து தெளிப்பு செயல்விளக்கம் 100 சதவீதம் மானியத்தில் வழங்கப்பட்டது. 18.11.26 புதன்கிழமை அன்று செல்லமணி வயலில் 1 ஏக்கர் பரப்பளவில் ட்ரோன் மூலம் மருந்து தெளிப்பு செயல்விளக்கம் செய்து காண்பிக் கப்பட்டது. வேளாண்மை துணை இயக்குநர் செல்வம் செயல் விளக்கத்தில் கலந்து கொண்டு ட்ரோன் மூலம் மருந்து தெளிப்ப தனால் வேலை ஆட்கள் குறைவு, நேரம் குறைவு போன்ற தொழில்நுட்பங்கள் வழங்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் தா.மலர்விழி மற்றும் வோளண்மை அலுவலர் சு.சந்திரசேகர், திருப்புவனம், கலந்து கொண்டு ட்ரோன் பயன் படுத்துவன் தொழில்நுட்பங்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். அட்மா திட்ட பணியாளர்கள் சத்யா, வட்டார தொழில்நுட்ப மேலாளர், சண்முகப்பிரியா மற்றும் நந்தினி, உதவி தொழில்நுட்ப மேலாளர் அதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தலைப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

சாகரிகா கடற்பாசி உரங்கள் - ஒரு பார்வை

சென்னை, நவ.18

இப்கோ சாகரிகா என்பது சிவப்பு மற்றும் பழுப்பு நிறக்கடற்பாசியிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை அடிப்படையிலான தாவர வளர்ச்சி ஊக்கி ஆகும். இது திரவம் மற்றும் குருணை வடிவங்களில் கிடைக்கிறது. நெல், மக்காச்சோளம், கரும்பு, நிலக்கடலை உள்ளிட்ட பல்வேறு பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்தவும், விளைச்சல் மற்றும் தரத்தை அதிகரிக்கவும் சாகரிகா உதவுகிறது.

1. சாகரிகா குருணை

பயன்படுத்தும் முறை : பயிர் முளைத்த 15-25 நாட்களுக்குள், ஏக்கருக்கு 10 - 20 கிலோ என்றளவில் இடவேண்டும். தோட்டப்பயிர்களில், செடிக்கு 100 - 150 கிராம் என்றளவில் இடவேண்டும்.

2. சாகரிகா திரவம்

இலைவழித் தெளிப்பு : ஒரு லிட்டர் நீரில் 5 மி.லி. சாகரிகா திரவத்தைக் கலந்து தெளிக்கலாம்.

முதல் தெளிப்பு : பயிரின் வளர்ச்சிப் பருவத்தில், ஏக்கருக்கு 500 மி.லி.

இரண்டாம் தெளிப்பு : பூக்கும் பருவத்திற்கு முன், ஏக்கருக்கு 500 மி.லி.

சிறப்பம்சங்கள் ; 14%-18% சாம்பல் சத்துக்கள், அமினோ அமிலங்கள் மற்றும் தாவர வளர்ச்சி ஊக்கிகள் கொண்டது.

கிடைக்கும் அளவுகள்

குருணை : 10 கிலோ / 25 கிலோ

திரவம் : 100 மி.லி. / 250 மி.லி. / 500 மி.லி. / 1,000 மி.லி.



நன்மைகள்

பூக்கள் உதிர்வதைக் குறைத்து காய்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும். வேர் மற்றும் தண்டின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. பயிர்களில் மகசூல் மற்றும் தரத்தை மேம்படுத்துகிறது. பயிர்களின் வறட்சியைத் தாங்கும் தன்மையை அதிகரிக்கிறது. மண்ணில் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும். இயற்கை விவசாயத்திற்கு ஏற்றது.

விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி



கடலூர், நவ.18

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம் சார்பாக 18.11.26 அன்று, ஸ்ரீமுஷ்ணம், குறிஞ்சிப்பாடி மற்றும் பண்ருட்டி வட்டாரத்தில் உள்ள நெடுஞ்சேரி, வெங்கடாம்பேட்டை மற்றும் காட்டு கூடலூர் ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, மண் வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர்கள் சு ஜெய்வேலு, சத்தியநாராயணன் மற்றும் கமலக்கண்ணன் ஆகியோர் கலந்துக் கொண்டு, நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண்வளஅட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு மத்திய மாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயி களுக்கு விளக்கினர். பயிற்சியில் கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம், குறிஞ்சிப்பாடி மற்றும் பண்ருட்டி வட்டாரத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

ஆமணக்குப் புண்ணாக்குப் பொறி அமைக்கும் செயல்விளக்கம்

திருவாரூர், நவ.18

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டாரம், திருப்பத்தூர் கிராமத்தில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கீழ்வேளூர் மாணவர்கள் விவசாயிகளுக்கு ஆமணக்குப் புண்ணாக்கு பொறி அமைக்கும் முறை குறித்து செயல்விளக்கம் அளித்தனர். இந்நிகழ்ச்சியில் ஆமணக்குப் புண்ணாக்கின் முக்கியத்துவம், பொறி தயாரிக்கும் முறை, அதனை வயலில் வைக்கும் இடம் மற்றும் முறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், பயிர்களில் காணப்படும் தீங்கு விளைவிக்கும் பூச்சி களைக் கண்காணித்து அவற்றின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்து வதில் இப்பொறியின் பங்கு குறித்து விளக்கினர்.

இரசாயன பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவதன் அவசியத்தையும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். விவசாயிகள் இப்பொறியின் பயன்பாடு மற்றும் நன்மைகள் குறித்து ஆர்வத்துடன் கேட்டறிந்தனர்.

குறுந்தானிய பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

அரியலூர், நவ.18

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டாரத்தில் குறுந்தானிய பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து செந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது,

செந்துறை வட்டாரத்தில் குறுந்தானியப யிர்களின் சாகுபடி பரப்பை அதிகரித்து வசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் நோக்கில் வேளாண்மைத் துறையின் மூலம் பின்னேற்பு மானியம் வழங்கப் பட்டு வருகிறது. இதன்படி தினை, சாமை, வரகு, பனிவரகு மற்றும் குதிரைவாலி போன்ற பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயி களுக்கு ஏக்கருக்கு ரூ.3239/- பின்னேற்பு மானியமாக வழங்கப் படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 1 எக்டர் வரை மட்டுமே மானியம் வழங்கப்படும். மாறி வரும் பருவநிலை மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் குறுந்தானிய பயிர்களின் சாகுபடியை ஊக்கு விப்பது அவசியமாகும். உழவு மற்றும் களை எடுத்தல், தெளிப்புப் பணி, பறவை விரட்டுதல் உள்ளிட்ட இடைநிலை செயல்பாடுகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் உழவர் செயலியில் பதிவு செய்து நில உடைமை மற்றும் சாகுபடி செய்வதற்கான உரிய விபரங்களை பதிவு செய்ய வேண்டும். மேலும் வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் தோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம். விவசாயி களின் விண்ணப்பங்கள் மற்றும் நில விபரங்கள் கள ஆய்வு மூலம் சரிபார்க்கப்பட்ட பின்னர் தகுதியான விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியம் வழங்கப்படும். எனவே செந்துறை வட்டார விவசாயிகள் குறுந்தானிய பயிர்களை சாகுபடி செய்து பின்னேற்பு மானியத்தை பெற்று பயனடையுமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இயற்கை முறையில் நெல் பயிர் நடவு செயலில் வேளாண் கல்லூரி மாணவர்கள்

ஈரோடு, நவ.18

தந்தை ரோவர் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் (TRIARD), 16.11.26ல் வேளாண் பயிர் உற்பத்தித் தொழில்நுட்ப பாடத்தின் ஒரு பகுதியாக, இயற்கை வேளாண் தொழில்நுட்ப முறைகளை பின்பற்றி மாணவர்கள் தங்களது உழவியல் பாடத்தின் அங்கமான பயிர் உற்பத்தி பாடத்திட்டத்தில் நெல் நடவு செய்து அசத்தினர்.





இந்நிகழ்ச்சிக்கு தந்தை ரோவர் கல்விக் குழுமத்தின் மேலாண்மைத் தலைவர் முனைவர் வரதராஜன் தலைமை தாங்கினார். கல்விக் குழுமத்தின் துணைத் தலைவர் ஜான் அசோக்குமார் முன்னிலை வகித்தார். கல்லூரியின் முதல்வர் முனைவர் இறைவன் அருட்கனி அய்யநாதன் அவர்கள் வயலில் பாரம்பரிய முறைப்படி பூஜை செய்து, முதல் நெல் நாற்றை நடவு செய்து நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

இது போன்ற செய்முறைகள் பயிற்சியின் மூலம் நிலம் தயாரித்தல், நாற்று நடவு செய்தல், பயிர்களுக்கு இடையிலான இடைவெளியைப் பராமரித்தல், இயற்கை உரங்களைப் பயன்படுத்துதல், நீர் மேலாண்மை மற்றும் பயிர் பாதுகாப்பு போன்ற பல்வேறு சாகுபடி நுட்பங்களை மாணவர்கள் நேரடியாகக் கற்றுக் கொள்கின்றனர்.

மேலும், இயற்கை வேளாண் முறைகளைப் பின்பற்றி நெல் பயிரின் வளர்ச்சியை மேம்படுத்துதல், மண் வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் அதிக மகசூல் பெறுவதற்கான தொழில்நுட்ப வழிமுறைகள் குறித்தும் செய்முறை வாயிலாகத் தெரிந்து கொள்கின்றனர்.

வகுப்பறைக் கல்வியுடன் களப்பயிற்சியையும் ஒருங்கிணைத்து, மாணவர்களே நேரடியாகப் பயிர் சாகுபடியில் ஈடுபடுவதன் மூலம் நடைமுறை வேளாண் அறிவையும் தொழில்நுட்பத் திறனையும் மேம்படுத்தி, எதிர்காலத்தில் சிறந்த வேளாண் தொழில்நுட்ப வல்லுநர்களாக உருவாகும் நோக்கில் இந்த பாடத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியை உழவியல் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் இரா.ராஜபிரியா மற்றும் க.முத்து ஆகியோர் சிறப்பாக ஒருங்கிணைத்து நடத்தினர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் நிர்வாக அலுவலர் ஜெயசீலன் மற்றும் அலுவலக மேலாளர் திருநாவுக்கரசு ஆகியோர் செய்திருந்தனர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

ஆமணக்குப் புண்ணாக்கின் முக்கியத்துவம் மற்றும் வாழையில் வேர் வழி ஊட்டமளித்தல் குறித்து செயல்விளக்கம்!



திருச்சி, நவ.18

திருச்சி மாவட்டம், மணச்சநல்லூர் பகுதியில் செயல்பட்டு வரும் தனலக்ஷ்மி சீனிவாசன் பல்கலைக் கழகத்தின், வேளாண் அறிவியல் பள்ளியைச் சேர்ந்த B.Sc. (Hons.) Agriculture மாணவர்கள், RAWE திட்டத்தின் கீழ் விவசாயிகளைச் சந்தித்து வேளாண் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில், ஆமணக்குப் புண்ணாக்கின் முக்கியத்துவம், அதன் ஊட்டச்சத்துப் பயன்கள் மற்றும் மண்ணின் வளத்தை மேம் படுத்துவதில் அதன் பங்கு குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக் கப்பட்டது. மேலும், வாழையில் வேர் வழி ஊட்டமளிக்கும் முறை யின் முக்கியத்துவம், அதனைச் செயல்படுத்தும் முறை மற்றும் அதன் பயன்கள் குறித்தும் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப் பட்டது. இதன் மூலம் விவசாயிகளுக்கு இயற்கை உரங்களின் பயன்பாடு மற்றும் வாழை சாகுபடியில் ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இயற்கை விவசாயப் பண்ணையில் பாரம்பரிய ரத்தசாலி நெல் ரகம் : RAWE மாணவர்கள் கள ஆய்வு!



திருச்சி, நவ.18

திருச்சி மாவட்டம், லால்குடியில் செயல்பட்டு வரும் உழவன் அறக் கட்டளையின் (Uzhavan Trust) வழிகாட்டுதலின் கீழ், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேளாண் புல இறுதியாண்டு மாணவர்கள் தங்களது 81 நாள் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, ஐந்து நாள் NGO Attachment பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் முதல் நாளான இன்று, லால்குடி வட்டம் மேலவாளாடியை சேர்ந்த இயற்கை விவசாயி ஹரிபாஸ்கரின் இயற்கை விவசாயப் பண்ணைக்கு களப்பயணம் மேற்கொண்டனர். அங்கு பாரம்பரிய நெல் ரகமான ரத்தசாலி சாகுபடி குறித்து நேரில் பார்வையிட்டு அறிந்து கொண்டனர். இந்நெல் ரகத்தின் பயிர் கால அளவு சுமார் 110 நாட்கள் என உழவன் அறக்கட்டளையின் உரிமையாளர் ஜெகன்

மாணவர்களுக்கு விளக்கினார். மேலும், இயற்கை விவசாய முறைகள் மற்றும் பாரம்பரிய நெல் ரகங்களின் சிறப்புகள் குறித்தும் மாணவர்கள் கேட்டறிந்தனர். அங்கு இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் பணியையும் நேரில் பார்வையிட்டனர்.

இயற்கை பூச்சி மேலாண்மை மற்றும் விதைத் தரம் அறியும் செயல்விளக்கமளித்த வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள்!



காஞ்சிபுரம், நவ.18

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், நத்தநல்லூர் கிராமத்தில் டான் போஸ்கோ வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் சார்பில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு மற்றும் செயல் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் எருக்கன் இலைச் சாறு (Calotropis Leaf Extract) தயாரிப்பு மற்றும் அதன் பயன் பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப் பட்டது. இயற்கை சார்ந்த பூச்சி மேலாண்மை முறைகள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், முட்டை மிதக்கும் முறை (Egg Floatation Technique) மூலம் விதைகளின் தரத்தை அறியும் முறை, உப்புநீரைப் பயன்படுத்தி சேதமடைந்த மற்றும் தரமற்ற விதைகளைத் தனித்தறியும் நுட்பம் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மைக் கல்லூரி மாணவர்களான சர்வேஷ், சருகேஷ், ரஞ்சித் குமார், சஞ்சீவி, ருத்திரன், சஞ்சய், ரமணா, சத்தியஜித், சாம்சன் மற்றும் ரெம்மஸ் ஆன்டோ ஏ ஆகியோர் பங்கேற்று செயல்விளக்கம் அளித்தனர்.

இந்நிகழ்ச்சியின் மூலம் விவசாயிகளுக்கு இயற்கை பூச்சி மேலாண்மை மற்றும் தரமான விதைகளைத் தேர்வு செய்வது குறித்த நடைமுறை விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தலைப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741